**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி (பொறுப்பு) அலுவலரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் - திரு.சு.தயாளன்,எம்.ஏ.,பி.எட்.**
**ந.க.எண்:2088 /ஆ4/ 2025 நாள்:07.07.2025**

| பொருள்: | தேர்வுகள் - பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் - அனைத்து வகை அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகள் - பத்து, பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகள் - ஜூன் மாதப் பாடத்திட்டம் - சிறுதேர்வுகள் நடத்துதல் - தேர்வு கால அட்டவணை மற்றும் பாடத்திட்டம் தெரிவித்தல் சார்பு |
|---|---|

வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பத்து, பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகள் பயிலும் மாணவர்களைப் பொதுத்தேர்வுக்குத் தயார்படுத்தும் பொருட்டு நாள்தோறும் சிறுதேர்வுகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்சிறுதேர்வுகளைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிச் சிறப்பாக நடத்தி முடிக்குமாறு அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வழிகாட்டு நெறிமுறைகள்**

1. தேர்வு கால அட்டவணை மற்றும் பாடப்பகுதியினை மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்க்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.
2. தேர்வுகள் கால அட்டவணைப்படி உரிய நேரத்தில் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.
3. தேர்வுக்கான வினாத்தாள்கள் மாவட்ட நிர்வாகத்தால் தேர்வுக்கு முந்தைய நாளில் அனுப்பி வைக்கப்படும்.
4. வினாத்தாட்களைப் போதுமான எண்ணிக்கையில் பிரதி எடுத்துக் கொடுத்தோ அல்லது வினாக்களைக் கரும்பலகையில் எழுதியோ தேர்வு நடத்தப்பட வேண்டும்.
5. தேர்வினை தனியாகக் குறிப்பேடு ஒன்று பராமரித்து அக்குறிப்பேட்டிலேயே எழுதப்படுதல் வேண்டும்.
6. தேர்வு முடிந்த பின் திருத்தம் செய்யப்பட்டு மதிப்பெண் பட்டியல் தயார்நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.
7. தேர்வு மந்தனத் தன்மையுடன் நேர்மையாகவும் முறையாகவும் நடத்தப்படல் வேண்டும்.
8. தேர்வு நடைபெறுவதை ஆய்வு அலுவலர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தல் வேண்டும்.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
வேலூர் மாவட்டம்.

இணைப்பு:
1.சிறுதேர்வுக் கால அட்டவணை மற்றும் பாடப்பகுதி

பெறுநர்:
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்:
1.மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
2.மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/ தனியார்) அவர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.